சதுரகிரிவழிநடை
அலங்காரச் சிந்து

Q23:417
N23
177080

644

உ

சிவமயம்

சுந்தரமகாலிங்கர் துணை

2 - AUG 1923

# சதுரகிரிவழி நடை

# அலங்காரச் சிந்து.



இஃது

சிவகாசி தெற்குரத வீதி

நாடார் பிரஸ் லிமிட்டெட்

அச்சாபீசில் பதிக்கப்பெற்றது.

1923. [அணா-2

923:417
N123.
177080

உ

சிவமயம்.

சுந்தர மகாலிங்கர் துணை.

2 - AUG 1923

---

சதுரகிரி வழிநடை

# அலங்காரச் சிந்து.

இஃது

சாத்தூர் தாலுகா கிருஷ்ணப்பேரி

ஸ்ரீமான், ஆ. மா. கருப்பண நாடாரவர்கள் குமாரர்

அனந்தப்ப நாடாரவர்களால்

இயற்றியது

---

சாத்தூர் தாலுகா சிவகாசி வித்துவ சிரோன்மணி ஸ்ரீமான்

**தா.ச. சின்னக்கனி நாடாரவர்களால்**

பார்வையிடப்பெற்று,

---

சாத்தூர் தாலுகா கிருஷ்ணப்பேரி,

ஸ்ரீரத்ன சபாபதி கீதாமிர்த பஜனைச் சபையின்

பொருளுதவியால்,

சிவகாசி, நாடார் பிரஸ் லிமிட்டெட் அச்சாபீசில் பதிக்கப்

பெற்றது.

விலை] 1923. [அணா 2.

177080.

# சாற்றுக்கவிகள்.

ஸ்ரீமான் சிவகாசி தூ. ச. சின்னக்கனி நாடாரவர்களால்

இயற்றியவை.

மானமாமருப்பும் வழுவையின் சிருங்கம்வரைபடுங் குங்குமங்கோட்ட
நானமாநேய மகிற்றணி பிறங்குஞா ழலுந்திகிரியுந் திரட்டிப்
பேணமாருதக மிருவிளிம்புடைத்துப்பிரள் திரைவையைசூழ்ந்தழுந்தா
மேனமாதவரும் பெருக்கமுந்தணவா முத்தமிழ்ச் செழியனன்னாட்டில்

வியனுலகினுக்கப்புறமுயர் சிமயமிலிர் சதுராசலத்தினிலும்
புயனுலகளந்தோன் போகியாதித்தர் பொற்பொடுபொலவீற்றிருக்கும்
பயனுலவுறவார்கலிலையசசெய்க் களித்தாண்ணவன் பணிமதிசசடையான்
நயனுலகாட்சகா வென்பார்க்கனிதருமகாலிங்கதேசிகற்கே.

மிகமிகுமலர்க்கா நிறைதருகிருட்டிணப் பேரியென்றொரு நகரியினிற்
சுகமுடன்வாழு மனந்தப்பமகிபன் சொன்னடைச் சிந்தையோர்ந்தெழிற்சற்
பகமகபதிகண்சதத் தசம்பெற்றான் பகர்கடோற்பவன் மலேத்தலனும்
மிகவுடல் குறுகிப்பயங்கொண்டாலியாரே விளம்புவாரிதன் பொருள்
விரித்தே.

---

சிவகாசி இந்து எலிமென்டரி ஸ்கூல் மானேஜரும் பக்தர் சுதாப்
பிரசங்க பாகவதரும் ஆகிய ஸ்ரீமான் K. சர்க்கரைப் புலவர் அவர்
களாலியற்றியவை.

கட்டளைக் கலித்துறை

வடியாதவன் சுடரொளு ஞான்றினும் புகமார்க்கமில்லாக்
கடியார்பொழில் வளஞ்சேர் சதுராசலக் காச்சிபெற ''
வடியார் ஞூழாநிரண்டர்ச்சித்து வாழ்த்தவருள் பொழிமென்
பொடியாடு சுந்தரலிங்கக்கடவுள்தன் பொன்னடிக்கே. "

நேரிசைவெண்பா

அற்பாய் வழிநடைச்சிந்தாசில் தமிழாற்புகன்றான்
பொற்பாரனந்தனுளம் பூரிக்க — சொற்பாக்க
ளெல்லாமினி தறியுமேற்ற கிருஷ்ணப்பேரியில்வாழ்
வல்லானனந் தப்பமால்

---

2 - AUG 1923
MADRAS

சாத்தூர்தாலுகா மூளிப்பட்டி ஜமீன் கஸ்பா
மகா-ா-ா-ஸ்ரீ பச்சையநாடாரவர்கள் குமாரர்
சுந்தரநாடாரவர்களியற்றிய
அறுசீரடி யாசிரியவிருத்தம்.

அதிபெருகுஞ் சதுரகிரிப் பெருமான்றன் றிருபதங்கள்
    தொழுது போற்ற
ரதிமதனுஞ் செலுவழியின் வளமனைவிக் குரைத்தசெயல்
    நற்றிந் தாக
நதிகுலவு சேல்கழனி நிறைதருகிஷ் ணப்பேரி
    நகர்கொள் வாசன்
அதிகதமி ழானனந் தப்பனெனுந் திருநாம
    னருளினனால்.

இதுவுமது விருத்தம்.

சர்க்கரைகற் கண்டுவெல்லஞ் சீனிப்பாகும்
    சாற்றிடுமுக் கனிபிழிந்த சாறுங்கொம்பி
னிற்கசிதேன் வண்டுணப்பூ நிறைந்ததேனும்
    நிகரரிய சுரபிவடித் திடுபாலொன்றப்
பக்குவம துறக்காய்ச்சி வட்டுச்செய்து
    பார்க்கினுமப் பண்சுவையே பலிதமென்னத்
தக்ககவி வாணரெல்லாம் புகழப்பெற்ற
    தன்மையதா மிதன்பெருமை சாற்றொணாதே.

---

செவல்ப்பட்டி ஜமீன் கஸ்பா இலக்கணவித்வான்
மகா-ா-ா-ஸ்ரீ சுப்பையநாடாரவர்கள் குமாரர்
மகா-ா-ா-ஸ்ரீ அருணகிரிநாடாரவர்களியற்றிய
அறுசீரடி யாசிரியவிருத்தம்.

சித்திரத்தைப் போலிந்துயர்வா யிருக்குமலை
    லிலையெனவே தெரிந்து ஞான
சித்திரத்த வர்க்குதவுஞ் சதுரகிரி
    கடவுடம்பாற் செப்பினானோர்
சித்திரங்கொண் டோங்குசிந்தை யரியேறி
    யனந்தப்பச் செல்வன் கேட்டு
சித்திரத்தை யொத்திருந்தான் குறுமுனியு
    மிதன்பெருமை செப்பலாமோ.

சிவமயம்.

சுந்தரமகாலிங்கம் துணை

# சதுரகிரி வழிநடை அலங்காரச் சிந்து.

### விநாயகர் துதி

### கலி விருத்தம்.

பூமனிந்திரன் பொற்பொடு மேவுநற்
காமர் விஞ்சுபைங் காச்சதுராசலச்
சேமமார்வழிச் சிந்தினைத் தீட்டவே
யேமநீள்களிற் றெந்தையை யேத்துவாம்

### கடவுள் வணக்கம்

### கலித்துறை

மங்கைபாகனை மாயனைமா மயிற்
செங்கைவேலனைத் தேன்றுதைத்தாடுவெண்
பங்கயத்துறை பாரதி பாதமும்
எங்கைகூப்பி யிறைஞ்சு மென்ஞான்றுமே.

### அவையடக்கம்

விண்ணினிற் பறக்குங் கலுழனுக்கெதிராய்
    மேவியேவொரு சிறுமசகம்
கண்ணியே பறக்க நசையைமேவிட்டு
    நாணிலாதுலவுவ தொப்பே
கண்ணகல் ஞாலத்தினி லிலக்கணநூற்
    கடலினை மடுக்க [illegible] முனி
எண்ணறியாதே னிவ்வழி நடைச்சிந்
    தினையடுத் திசைத்திடல்மாதோ

## விருத்தம்.

தேசமதில்நலமிகுந்து செழிப்புற்றோங்குந்
திருமாலின்றுநாம மிலகுஞ்ஞான
வாசமுறுங்கிஷ்ணாநகர் தன்னில்மேவு
மங்கையரு மாடவரு மகிழ்ந்துகூடிப்
பாசமுடன்சதுரகிரி லிங்கநாதன்
பதமலரைப்பணியவழி மகிமைசொல்லி
நேசாதியோநாமுஞ் செல்வோமென்று
நேரிழைக்கிமதன்வளங்கள் நிகழ்த்துவானே.

---

### தெள்ளுதமிழுக்குதவு சீலன் என்ற வர்ணமெட்டு.

தங்கநிறப் பைந்தொடியே வாராய் நாமுஞ்
சதுரகிரி போவதற்கு நேராய் உயர்
சங்கரன் கிருபையினால் மங்கையிந் நகர்வளங்கள்
தானே சொல்லுவேனே (1)

இங்கிர் தமிலங்கு மலர்ச் சோலை பன்னீர்
யிச்சி சந்தமாலரசின் சாலை விண்ணி
லேகிவளர்ந் தேகமுகின் காயுங்குலைவாழைமிகுந்
திருக்குத் தென்னைப் பெருக்கும் (2)

தோன்றுமலர் வண்டுகீதம் பாடும் மேகஞ்
சூழ்வது கண்டேமயில்க ளாடும் நல்ல
சோடிசேர் புறாவினங்கள் கூடிடுங்குயிலிசையே
ஜோக்கு கண்ணால் நோக்கு (3)

மூன்றுபோகமும் விளையும் நஞ்சை யென்றும்
முக்கிய வரும்படியாம் புஞ்சை யெந்தன்
முன்னாக நடந்துவாரா யிந்தக்கர்க்கிணறுசீராய்
மொழியே பசுங்கிளியே. (4)

அன்னநடை மின்னரசே மானே வாராய்
ஆசையுடன் நன்னகரிற் றானே வாழு
மைய்யர் பங்களாவிதுவே தையலேதென்வீதிவெகு
அந்தம் இங்கு வந்தோம். (5)

மன்னவர்கள் மாளிகையைப் பாரு மேலே
வைத்தக மாந்தட்டு வெகு சீரு சான்றோர்
வாழுநிதியின்பெருக்கென் நாளுங்குறையாதிருக்கு
மயிலே சொர்னக்குயிலே (6)

தெள்ளமுதே தென்வடக்கு வீதி தனில்
சித்திரக்கடையிலங்குஞ் சோதி அங்கு
சிறந்தவெற்றிலைபாக்கு நிறைந்திருப்பதுவாங்கு
தேவி யெந்தன் ஆவி. (7)

கிள்ளைமொழி வாசகச்செந் திருவே யின்னம்
கேளழகமைந்திடுங்கீழ்த் தெருவே வுயர்
கிஷ்ணநகாங்குலவியஷ்டலட்சிமிபாவுங்
கியாதி இந்த வீதி. (8)

பெரியகடையென்பதிது வாமே திசை
பேர்பெரும் புகழ்சிறந்த தாமே யெந்தன்
பெண்ணமுதே விறபனைக ளென்னசொல்லுவேன்சனங்கள்
பெருக்கம் வெகு நெருக்கம். (9)

அரிசிபருப்பு வகையும் பாரு யென
தாரணங்கே காய் கனிகள் சீரு நம
தையன்மலைக்கேகிடவே துய்யசரக்கின் தினுசும்
அடியே வாங்கி முடியே. (10)

நவிலுநவதானி யங்க ளிருக்கும் மேலே
நல்லமருந்து வகையின் சரக்கும் பழம்
லண்டன்சீனி சர்க்கரைகற் கண்டவல் கடலை வெல்லம்
நாடி வாங்கி வாடி. (11)

சவுளிக்கடைகளலங் காரம் இங்கு
சரிகைமுந்திச் சேலைகள்சிங் காரம் உயர்
சந்திரவர்ணத்தாவணியு மிந்திரவர்ன ஆடைகாசிப்
பட்டு வாங்கிக் கட்டு. (12)

பங்கெனத்திரண்டதன ரதியே சல்லாய்
பஞ்சரங்கிக்கச் சிதுபொன் மதியே சீமைப்
பச்சக்கரைச் சோடிசோமன் கச்சைகாசா பீசிகளோர்
பாகம் உண் டநேகம். (13)

எந்தன் மனதுக்கிசைந்த மாதே கண்டு
யகிடுவோ மேல்புறமிப் போதே நிதி
யிந்நகரத்தின் விளங்கு மின்னரசே பார்மனைக
ளெங்குஞ் செலவம் பொங்கும். (14)

——0——

## நொண்டிச்சிந்து.

பங்கயவதனமயிலே யெனதுநேசப்
பைங்கிளியே வந்திடுவா யிங்கிர்தமுடன்
சங்கரன பதம்பணியச் சதுரகிரி
தங்குமாடியம்மாவாசை யெங்கும்வந்ததால்
மங்கையேசெல்வதற்கு மணமிகுந்த
வர்க்கவகை முக்கனிதேன் சர்க்கரையுடன்
இங்குகறிவகையினல் சம்பாவமுது
இன்பமுடனீசமைத்து அனபாய்முடிவாய்
பாதாதிகேசமுதல் ஆபரணம்
பந்திபந்தியாயிலங்குஞ் சந்திரக்குப்பி
மோதானகாசுவாலை சரப்புளியு
முத்துமணி மாலையணி நெத்தியாரமும்
ரத்னப் புல்லாக்குகளும் புஷ்பராகம்
நாகமணிக் கம்மலுடன் சேகரக் கொப்பும்
கைத்தலத்திற் காப்புகளும் ஒலிக்கொலுசும்
காலிற்பாடகம் தண்டைகோலச்சிலம்பும்
பற்றிய மெல்லிடையின ஒட்டியாணம்
பஞ்சவர்னப் பட்டுடையை வஞ்சியே கட்டு
பொற்கலசம் போலிலங்கு முனதுபாரப்
பூரணத்தனங்குகளுக்கு வாரிட்டணிந்து
ஆகும்வெற்றிலைபாக்கு கையிற்பிடித்து
அனபுடனே வந்திடுவா யின்பாதியே.
போகுவோ மேற்குவழி நமக்கெதிரில்
பூங்காவனந் தோனறுதுபா ராங்குசெல்லுவோம்
வாசமுள்ள மருவு மருக்கொழுந்து
மல்லிகை பிச்சி ரோஜா முல்லை மலரும்
பூசைக்கென்றேமலர்ந்து நிறைந்திருக்கும்
பூவதனை நாமெடுத்து ஆவலுடனே
பத்தியாய் மண்டபத்தில் வீற்றிருக்கும்
பரமன் திருமகனாங் கரமுடைய
சித்திவிநாயகன்றன் பதமலரைச்
சிரமுற்றுறப்பணிந்து வரமும் பெற்றேம்

சீலமுடனே வருவாய் மனமகிழ்ந்து
 தேவி காளியம்மனிங்கே மேவியிருக்கும்
ஆலயந்தன்னைப்பாராய் திருமதிலும்
 ஆசாரச்சாவடியின் வாசலிதுவே
ஆரியைப்பாரணங்கே தெரிசனஞ்செய்
 ஆங்காரரூபிபுக ழோங்கு நாரணி
மாரிபகிரதியாம் பரமபத
 மங்கையுமையந்தரியைச் செங்கை தொழுதோம்
நற்றமிழேசிறந்த சான்றோர்கள்
 நல்லதண்ணீர்க் கிணறுபோலில்லை யெங்குமே
சுற்றுச் சுவரிலங்கும் உயர்வமைந்த
 சொர்ணப்படித்துறையு மன்னமே பாராய்
வந்து புனலருந்துவாய் அந்தமிகும்
 வாவிதன்னைப்பாராடியேதூயசலமே
செந்தாமரை மலரும் எங்கும்வரால்
 சிறந்துசேல்வாளைமீன்கள் நிறைந்திருக்கும்
சோலிக்குந்தடாகமதி லனுதினமுஞ்
 சுத்தசலக் கிரீடைசெய்வா ரித்தலத்தினோர்
ஒலிகரு டூர்காவலன்வாழ் சந்நிதியி
 லுத்தமியா ளைவணங்கு சித்திபெறுவோம்
அண்ட மளாவிடவே வடபுறத்தி
 லாலமர மாளிகையின் கோலமதனைக்
கண்டிடு காமவல்லியே வல்லயஞ்சேர்
 கருப்பசாமி மகிழ்ந்திருப்பதுவே
சாமியைப் போற்றிடுவாய் கரங்குவித்தே
 தையலரே வய்யமில்லா மெய்வரம் பெற்றோம்
பூமிதனில் சிறந்து வுயர்வுபெறும்
 பொற்கரையின் பாதையிதுநிற்காமலேறாய்
கண்வாய்ப் பெருமைபாராய் அலைதனும்புங்
 கார்மேகஞ்சூழ் கடல்போல் நீர் பெருகும்
மின்னேநலங் கிடும்பார் நம்மள்பதி
 வேயிசைத்த வாயன் பெருமாள்கம்பமே
கம்பந்தனைப்பணிவாய் யெந்தனது
 காதலியே பாவமெல்லாம் போயகலுமே
அம்மச்சியார்வாழுங் கோவிலிதின்
 அந்தமதைச்சுந்தரியே வந்துபாரடி
கோதையே நாம்பணிவோம் முன்காவல்
 கூடிய வயிரவனை நாடிவணங்கே
மாதாகிருபையு முற்றோம் இந்தவழி
 மார்க்கமதிலே செல்லுவோஞ் சீக்கிரந்தானே.

## புறப்பாட்டு வர்ணமெட்டு.

அறமிகுந்தசெங்கையரே ஆசைதருமங்கையரே
அன்னமே-முன்னமே-நன்னிதவழிவருவாய்
மின்னுசதுரா சலமே அ

சிறந்தசிவகாசியிருந் தேகும்வண்டிப்பாதையிது
செல்லவே-மெல்லவே-நில்லாதுவந்திடுவாய்
வல்லபிரான் தன்மகளே சி

செங்குமுதபூரணியே சீர்கிழவனூருணியே
தேவியே-ஆவியே-வாவியின் சலம்பருக
மேவிவழிகூடிடுவோம் செ

பங்கையங்களேசிறந்த பாணாங்குளமேரியிந்தப்
பாதையே-கோதையே-நீதமுடன் செல்வோமடி
சீதளப்பொன் மேனியளே ப

கான்றிகழுங்கோவிலைப்பார் கரைதனில் வாழும்மச்சியார்
காணவே-தோணவே-வேணும்வரம்பெற்றிடுவோம்
ஞானமுறவேவணங்கே கா

தோன்றுது பாட்டக்குளமே சுந்தரம்பாரொன்னுளமே
தோகையே-வாகையே-யோகமெனவேபிடித்து
சோகமது தீர்த்திடுவாய் தோ

சத்தியந்தவறாநீதி சான்றோர்கள்கடைவீதி
தன்னிலே-முன்னிலே-வுன்னதமிகுஞ்சரக்கு
நன்னயமாய்வாங்கிடுவார் ச

பக்திபெறாமிக்கோரிடம் பாருதருமத்தின் மடம்
பாடியே-தேடியே-நாடிக்குழிரேருந்தி
கூடிவருவாய்மகிழ்ந்தே ப

நண்ணியிந்தநகர்கடந்தோம் நல்லரசமரமடைந்தோம்
நங்கையே-இங்கையே-தங்கியேநாமேகிடுவோம்
துங்கநடுவக்கரைமேல் ந

கண்மாய்க்கலிங்கலிது காதலியாளேவுனது
காலினில்-மேலிடு-மோலச்சிலம்பொலிக்க
கோலமணற்பாதை நேராய் க

மாமயிலேயுனையழைத்துவந்தேன் தாமெனவேகளைத்து
வாடாதே-தேடாதே-கூடாரச்சோலைகளும்
மாடமதுதோன்றுதுபார் மா

சேமாசத்தின்கரும்பே செங்கனிவாய்ப்பூவரும்பே
சித்தினி-பத்தினி- யெத்தவத்தோரும்புகழும
வித்தகி பூங்காவனமே. சே

---

## கும்மி.

மங்கைப்பருவ மதி முகமேயென்
மனதுக்கிசைந்த கனிரசமே
கங்கையணிந்த பராபராபகி
கன்னிதுர்க்கையம்மன் கோவிலிதே. 1

நாலுபுறமுந் திருமதில்வாயிலும்
ரத்தினக்கால்மணி மண்டபமும்
பாலெலுந்தீர்த்தக் கிணறுகளுமிங்கு
பந்தியாய்வாழையுந் தென்னைகளும். 2

பூசைக்குரியபுஷ் பத்தருவும்நல்ல
பூரணக்கும்பமும் பொன்னனையும்
ஆசையமைந்திடுங் கற்பகமேவந்து
அம்மனைக்கண்டிடு வாயணங்கே. 3

காளியிவளே மாரியிவளேநம்மைக்
காத்தருளுங்குல தாயிவளே
ஆளியின்மீதி லாரோகணிக்குந் துர்க்கை
அம்பிகைபாதம் பணிந்திடுவோம். 4

வாலைமனோன்மணி யைத்தொழுதேவரம்
வாங்கிவெண்ணீறை நுதலணிந்தோம்
காலதாமதமின் றிவருவாயெந்தன்
கார்குழலாளேயிப் பாதைவழி. 5

தருமத்துப்பட்டியி னூடையிதாமடி
தாண்டியேசெல்லுவோம் பெண்ணரசே
திருமுகவாயிலு மாமலைபோலவே
ஸ்ரீகிஷ்ணன்கோவிலுந் தோன்றுதுபார் 6

கோவிலைக்கண்டு நமஸ்கரிப்பாயெந்தன்
கோதையரேயிந்தச் சாலைதன்னில்
மேவியவில்லிப்புத் தூரிருந்துவரும்
வேண்டியவண்டிக ளிவ்வழிக்கே. 7

சொல்லுமிச்சாலையிற் கண்ணியபோங்கிடும்
தூயசர்க்கரா லமைத்தசர்தை
வல்லியரேயிதன் மாட்சிமைநோக்கிட
வானோர்பதிக்கு மரிதாமே. 8

வீசுநறுமலர் முக்கனியாவுமே
விற்குஞ்சரக்கும் புடவைகளும்
ஆசுகநேர்விழி மாதரசேசற்று
அன்புடன்பார்த் திடுவாய்ததியே. 9

பாலத்திறனுடையுங் கண்டிடுவாய்வட
பக்கம்பதனியு மூண்டிடுவாய்
கோலத்துடனே சதுரகிரிசெலவும்
கோடானகோடி ஜனங்களைப்பார் 10

வடக்கேமதுரைக்கிப் போகிறரோட்டிலு
மங்கம்மாள்சாலை யென்றேயுரைப்பார்
நடக்கிறபீட்டுக் கனிஸ்டேபிள்தங்கிடும்
நற்சாவடிதன்னைப் பார்மயிலே. 11

பேடையனனமென வேநடந்தேமேற்குப்
பேருபரஸ்தாவழி தான்கடந்தே
வோடைசிரங்கு முந்தலைடைந்தேமன
துல்லாசமாய்வரு வாய்தொடர்ந்தே. 12

மிக்கபெருமாளுக் குற்றதோர்கம்பமே
மெல்லியரேவந்து பார்த்திடுவாய்
தக்கவுசிலை மாமுங்கொடிசூழுஞ்
சாமியின்கம்பக்கைக் போற்றிடுவாய். 13

செல்கிறவண்டி ஜனங்களைப்பாரடி
தேன்மொழியேயெந்தன் பாவையரே
தொலையகற்றும் சுந்தரமகாலிங்கர்
சோதிமலைதனக் கேகிடுவோர். 14

வந்தோநாமிந்தத் தளந்தனிலேநல்ல
மாமரச்சோலையும் நற்கிணறும்
கந்தநறுமண வாசமுறுந்தென்றற்
காற்றுவருநாய்க்க ரூற்றிதுவே 15

தண்ணீரருந்தித் தகையாறியிங்கு
சார்ந்திருக்குஞ் ஜனத்தைப்பாரு
யெண்ணியரொட்டி பிஸ்கோத்துகளுமிங்
கிருப்பதுவாங்கிடு வோங்கனியே. 16

கட்டுச்சாதந்தனைத் தானவிழ்த்துமெந்தன்
காதலியாளேநம் முன்னேவைத்து
சட்டவருக்கக் கறியமைத்துநன்றாய்
சாப்பிட்டுத்தாம்பூல முந்தரித்து 17

ஊற்றுக்கிணறுநல் லோடைகடந்துமே
உன்னதவால மரம்புகுந்தோம்
பார்த்துமிருந்து களிப்படைந்தேசெல்லும்
பாதையிற றென்மலையாறிதுவே. 18

துருக்கர்சமாதியைக் கண்டோமடிநாமும்
துரிதமாதாய் யிங்குவந்தோமடி
வெறுப்பணச்சற்றுநீ யெண்ணுதேமிக
வேண்டித்திருவருள் பெற்றிடுவோம் 19

காளிபுகழைக் கருதுஞ்செம்பட்டியின்
காட்சிதரும்புனல்ச் சீர்நதியே
மாளிகையும்மலர்ச் சோலையும் பாரிதோ
வஞ்சியரே கோபலாபுரமே 20

எங்குமிருந்துவரு வண்டிச்செங்கல்லை
யேற்றியேசெல்லும் வழிவிலகே
தங்கத்தொடியேபிச் செங்கற்காளவாயில்
தன்னைப்பார்த்துவரு வாய்பிறகே 21

சீர்பெருகுஞ்சதுராசலம்வாழ்செக
தீசனைத்தோத்திரஞ் செய்திடவே
பார்பதியோடைகண் டோங்கரையேறியே
பத்தினியேவழி கூடிடுவாய் 22

பார்க்கிலதிசயமாய் [illegible]
பச்சைப்பலாபனந் தோப்புகளும்
மேற்கிலிருந்து பெருங்குளங்கால்வாயில்
மீறிவருந்தண்ணீர்ப் பாலமிதே. 23

அல்லும்பகலுஞ் செல்லும்புனலேல்வுய
ரந்தக்கரையின் கலிங்கலிலே
வில்வருயன்குள மென்றுரைப்பாரடி
வேலையைப்போலலை மோதிடுமே. 24

——(o)——

பாளைவாய் கமுகில் என்றவர்ண மெட்டு.

சித்திரகிர்த்தமின்னே யெத்திசையிலும்புகழும்
வத்திராயிருப்புவந்தோம் பாரடி நகர்
சுற்றிலும்பூஞ்சோலைவெகு சீரடி 1

மெத்தவொளிபெற்றிலங்கும் கற்பளிங்குமாளிகைபார்
மிக்கதனவான்கள்ணி மாடமே அதின்
திக்கசாளரமமைந்த கூடமே 2

சுந்தரமேவந்தமிகுந் தந்தியாபீஸ்கண்டோமவர்
 சொல்லவருவார்களிங்கு தேடியே காமுஞ்
 செல்லுவோம் வடபுறமே நாடியே 3

பந்தியாப்பழக்கடையுஞ் சிந்தைசேர்ஷாப்புக்கடையும்
 பாரிதோசிட்டிக்கடைக ளன்னமே வெகு
 சீர்பெறுகாப்பிக்கடைகள் முன்னமே 4

தோணுமிந்தவீதிபாராய் மாநிலத்தின்வேதகுலந்
 தோன்றியமறையோரக்ரா காரமே யெந்த
 னேந்திழையேபாரவர்கள் தீரமே 5

காணுமின்லீஷ்கொடியே பூணுமாஸ்திரட்டராபீஸ்
 கச்சேரியைக்கண்டிடுவாய் நங்கையே போலீ
 ஸெச்சரிக்கையாயிருப்பா ரிங்கையே 6

சத்தியபத்திரமதை நித்தியம்பதிந்துவருஞ்
 சப்ரிஜிஸ்ட்டராபீசிது பாங்கியே மன
 மொப்பியைந்துலாந்தலைப்பார் நோங்கியே 7

சித்தியும்புத்தியருளு முத்தாலம்மன்சாவடியில்
 தேடும்பழவர்க்கவகை பாரிதே யிங்கு
 வோடுங்கற்பகக்கொடிசூழ் தேரிதே 8

செட்டியார்தெருவிதுவே மட்டில்லாமண்பாத்திரங்கள்
 சென்றெடுத்திடுஞ்சனங்கள் கூட்டமே வான்
 குன்றினுக்கேகிடுவார்கொண் டாட்டமே 9

கட்டியபொற்சிற்றிடையே திட்டமணியாறடியே
 காட்சிபெருஞ்சான்றோர்கள் வீதியே வந்தோ
 மாட்சிமைபார்பேட்டையதின் சோதியே 10

தென்னைகமுகுங்கிணறு மின்னுமடத்தொட்டிகளுஞ்
 சித்திரச்சாவடிகளுங் கண்டுமே வெகு
 பத்தியாச்சமைத்தடிசி லுண்டுமே 11

எண்ணியதிசைபணிந்து கண்டுயிலுவோமகிழ்ந்து
 யெவ்விடத்திருந்துவரும் நாளையே ஜனந்
 திவ்யகிரிசெல்லநல்ல வேளையே 12

——:-0-:——

## தொண்டிச்சிந்து

பூரணச்சந்திரவிம்பமே யெந்தனது
 புத்தியிற்கிசைந்தபணிச் சித்தினிமாதே

அருளானுதயமானதால் வருகுவாயெ
னஞ்சுகமேயின் னும்வழி கொஞ்சமாகையால்
சதுராசலஞ்செல்லுவோம் வீதியினிற்
சான்றோர்கடைகளிக்கு தோன்றுதுபாரீர்
மதுரைவிருதுநகரம் தூத்துக்குடி
வாழுஞ்சிவகாசிநகர்ச் சூழவிருந்து
வண்டிச்சரக்குகளுமே தினந்தினமும்
வந்துவந்திறங்குமடி கொந்தளமின்னே
கண்டிடுவாய்சவுளிக் கடைகளிது
கட்டுநவதானியங்கள் கெட்டுகளும்பார்
இந்நகருக்கிணையாய் வாரிதிசூழ்
இந்தியாதனிலுமுண்டோ சந்தைவிற்பனை
அந்தமகிமையுரைக்க சேஷனுக்கு
மாகிடுமோபாகனச்சொற்றோகைமயிலே
வடக்குவாச்செல்வியம்மன் வீற்றிருக்கும்
மாளிகையிற்சென்றுமவள் தாளிணைபோற்றி
திடத்துடன்வந்திடுவாய் சான்றோர்கள்
சிங்காரநந்தனத்தின் மங்கையேநேராய்
மண்டபந்தனைப்பாராய் திருமடமும்
வாழுஞ்சிவயோகியற்கென் நாளுமேயன்பாய்த்
தண்டமிழ்தருநேசன் யெப்போதும்நமைத்
தற்காத்தனுசரிக்கும் விக்கிநேசன்
சந்ததமுறுபாத மலரிணையைச்
சாஷ்டாங்கமாய்ப்பணிவாய் வாட்டடங்கண்ணே
சுந்தரலிங்கபுரம் வந்தோமடி
தோகையரேபாதையி லாகாசம்பட்டிபார்
செந்துவரிதழ்மாதே நமக்கெதிரில்
செக்காரூற்றுக்கருப்பன் பொற்பதந்துதி
மந்தித்தோப்பிதுபாராயீ மஞ்சுலவும்
மாவும்பலாவாழைகொய்யாக் காவுயர் தென்னை
மிக்ககனிகளுநிர்ந்து மதுபிதிர்ந்து
மேவிமலைமீதிருந்து தாவிவருநீர்
[illegible]புகுந்து மேலெழுந்து
தத்தளிததுவந்திடும் பெருத்தநதியாம்
ஆறனைநக்கடந்திடுவோம் நடந்துவாடி
யாரமுதேமீறுதன பாரவஞ்சியே

நாற்றிசையினுமிருந்தே வந்திறங்கும்
நாட்டுவண்டிப்பண்ணையிது காட்டினன்மாதே
பாணிப்பமைந்திடுமோ நிறைந்த ஜனம்
பறறியவழியுமின்றிச் சுற்றியே செல்வார்
தாணிப்பாறையில் வந்தோம முன்னிருக்குந்
தந்திமுகத்தைங்கரனை வந்து வணங்காய்
பாதசிலம்பினழகி இருபுறமும்
பந்திபந்தியாய்கடைக ளந்தமும் பாராய்
கோதியகுழலனமே அழகுபெறக்
கொட்டகையினுலமைந்த மிட்டாய்க்கடைபார்
விதவிதமாய்வகுத்தே குவித்திருக்கும்
வேறுபூநதிலட்டுவடை காராச்சேவுடன்
அதிரசத்தினுசுசுளும் உன்மனதுக்
காசையானதியாவுமெடு காசுகொடுப்போம்
படிதனிலேறிடுவாய் நாமுமிந்தப்
பக்கஞ்செவ்விளனீர்பழம் விற்கும்வாங்குவோம்
கொடியன ஞடிமேடாப் ஜனங்களுடன்
கூடிமகிழ்ந்தேகிரியை நாடியேகுவோம். [தந்தன தன தனன]

---

177080

## மாமகள்மேவிய என்ற வர்ணமெட்டு

ஆரம்புனைந்த குழலணங்கேசெல்லு
மம்புவி யுற்றவரே நடக்கு
மரசுரச் சொற்றவிரே வேறெது
மனுஷ்டியார் மற்றவரே
ஈசமாய்ராச்கிச்சி யம்மன்பதம்பணிந்
தேகுவார் நற்றவரே 1

O23:417 N23

சம்புசதாசிவ லிங்கத்தின்மேவியே
தாவிவரு நதியே குதிரையூற்
றுமிதுவே ரதியே வருகுவாய்
தான்கடந்தே மதியே
நம்பினபேர்களை ரட்சித்திடுங்குரு
நாதன்மனம் பதியே. 2

படிவெட்டுப்பாறையைப் பாரடிமாதேவுன்
பாதமிதித் தேறு கம்பியளி
பார்த்துமன மாறு கையால்பிடி
பாதையிது நேரு

கொடிகளடர்ந்து கிடக்குமலைவளங்
கோதையேநீ பாரு 3

தத்துவமாய்ச்சனம் அத்தியூற்றுதன்னில்
தங்கிடுவோர் கோடி நாமுமிங்கு
தாண்டிவந்தோந் தேடி வரும்புனல்
தானருந்தி வாடி
சித்தங்களித்தங் கிருந்துதகையாறிச்
சிந்துகவி பாடி 4

தோகையரே இது கோணவாசல்மேடு
தோணாறும்படி வழியே அடுக்குச்
சோதிபடாறை தெளியே யேறிவா
சோராதேபொற் கிளியே
யானைப்பழித்த வழுதே முன்செல்லடி
பங்கயவேல் விழியே 5

கோரக்கநாதரின் குண்டாலெனும்பெயர்
கொண்டநெடுங் கேணி பார்த்திடக்
கூசுமன நாணி வழியினைக்
கூடிடுவாய் பேணி
சாரமேவுமெட்டி லிங்கசோதிதன்னைத்
தாழ்பணிவோங் காணி 6

காவணத்தேதட மீதுகணபதிக்
கர்த்தரிவர் தானே கண்டுநீ
காங்குவிப்பாய் தேனே எந்நாளும்
காத்திடுவார் கோனே
பாவமகற்றும் டசுமிதிப் பாறையைப்
பார்த்துநீவா மானே 7

பின்னற் சடையணி மின்னலிடையாளே
பேணுமன்ன நடையே வந்தோமே
பெரியபசுக் கெடையே மதுரையில்
சேர்பெருநெய்க் கடையே
துன்னனுனுரத்ன சாமிநாடார்தர்மங்
சற்பகத்தின் கொடையே 8

நீருமோருமபானக் காரங்களஞ்ஜனம்
பிணறுநின்றே குடிப்பார் சுபதர்மம்
சேர்க்கவென்றே துடிப்பார் புண்ணிய
நேசரென்றே படிப்பார்
திரும்பினையனக் கோருங்கேணிநதி
சென்றுதுவி லடிப்பார் 9

தானங்கள்செய்து சமைத்துத்தளிகிலே
தன்னிலமுது மிட்டு அரோகரா
சம்போவென்று கும்பிட்டு அம்மாவாசை
சாரும்விரத மிட்டு
கானமயிலேபா ரேறிடுவோர்ஜனங்
கால்விரைவாய் முன்னிட்டு 10

இளமைப்பருவ மமைந்த செழுந்தேனே
யேரும்வழி பார்த்து வருகுவா
யெந்தன்கரங் கோத்து வுயர்மர
மீதுநவ்வ லாற்று
தளராதுவாடி சகியேபாம்புக்கேணி
தங்கித்தகைதீர்த்து 11

கூறும்புதிய பசுக்கிடையாவுங்
கொடுக்குங்கடைத் தெருவே அணிமரக்
கொம்படர்ந்த தருவே ஜனத்தளங்
கூடிடுஞ்செந் திருவே
பாரும்பலாவடி யேர்கருப்பசாமி
பாதம்பணி யுருவே 12

தாவிவளர்ந்த பலாவில்விடுங்கனி
சார்ந்துமேடே தொங்குதடி தூபதீபங்
தார்வனந் தங்குதடி முன் சர்க்கரைச்
சாதமும் பொங்குதடி
கூவியசாவல்க் கருங்கடாவெட்டுகள்
கோவிலில ங்குதடி 13

சாற்றியசெந்தமி ழேற்றுமனந்தப்ப
தாசன்சிந்து பாடி கருப்பண
சாமிபதஞ் சூடி மகாலிங்கர்
சன்னிதியைத் தேடி
போற்றியேமஞ்சணைப் பேச்சியின்பொன்னடி
பூவையேநீ வாடி 14

## ஸ்ரீராமச் சந்திரனே என்ற வர்ணமெட்டு

கனகமணிச்சிலையே கற்பில்மிகுங்கலையே
காணுங்கடைத் தெருவை பார் பார் பார்
காட்சியே நல்ல மாட்சியே 1

கட்டடம்போல்வருந்தே நெட்டுநெட்டாய்மிகுந்த
கடையினிலுள்ளவெல்லாந் தேர் தேர் தேர்
கண்மணி யெந்தன் பெண்மணி 2

இங்குஜனநெருக்கம் யெங்கும்வெகுபெருக்க
மிந்தவழிசெல்லுவோம் வா வா வா
இன்பமே பாராய் முன்புமே 3

இருபுறமாண்டிகளுங் குருடுகால்நொண்டிகளு
மிரப்போர்க்குக்காசியுநீ தா தா தா
இன்னமே நேரா யன்னமே 4

எப்புவிநன்னக ரிருந்துவருமன்னவ
ரிறங்கும் விடுதிகளைப் பார் பார் பார்
இங்கையே வாராய் நங்கையே 5

இவ்விடமெத்தனைபேர் தெய்வபிரார்த்தனையோ
ரிங்குமொட்டையிடுவார் நேர் நேர் நேர்
யேகுவோங் கண்டு போகுவோம் 6

தேங்காய் பழங்களுடன் சாம்பிராணி பூரமுடன்
சிறந்தபூமாலை விற்குஞ் சீர் சீர் சீர்
தேவியே எந்தன் ஆவியே 7

சேயிழையேநதியுந் தீர்த்தமிகவதியுந்
தெண்ணீர்கிணறுவெகு நேர் நேர் நேர்
செய்தமே பவங்-கொய்தமே 8

உல்லாசவஞ்சுகமே சல்லாபரஞ்சிதமே
வோங்கும் படிவழியைப் பார் பார் பார்
உருக்குமே ஜன நெருக்கமே 9

உயரமிருந்தபடி மயிலேநடந்துவாடி
வும்பரு லகையொக்குஞ் சீர் சீர் சீர்
வுன்னதங் கோவில் நன்னிதம் 10

சுந்தரலிங்கர் பதம் வந்துபணிந்துசிதஞ்
சூடந்தேங்காய்மலருந் தா தா தா
சுற்றியே வந்து பத்தியே 11

சோதிமணியடித்து நீதித்தேங்காயுடைத்துத்
தூப தீபங்களிட்டோம் வா வா வா
துதித்தமே மனம் பதித்தமே 12

கோவைக்கனியதரப் பாவைமுன்னேதாளக்
கூடமிலங்கு வதைப் பார் பார் பார்
கூட்டமே திருக் கூட்டமே 13

கொண்டுவந்துஜனங்கள் தொண்டரிடஞ்சாதங்கள்
கொட்டிக்குவித்திருக்குஞ் சீர் சீர் சீர்
கோடியே பாராய் சேடியே 14

காமயராசரணி நாமமிலங்குபணிக்
கட்டியமாளிகையைப் பார் பார் பார்
கண் கொளாதிந்தப் பங்களா 15

கர்த்தாப்பளியர்மடம் வத்ருயிருப்புமடங்
கனிஸ்டேபிள் தங்குமிடஞ் சீர் சீர் சீர்
காவனந் தன்னி லேமுனம் 16

சங்குசேகண்டியொலி தங்கமணிகளொலி
தாம்தாமென்றே முழங்குங் கேள் கேள் கேள்
தாளமே பெரு மேளமே 17

சாமியினுக்கிராணச் சாவடிப்பக்கமணச்
சன்னிதியார்க்கநல்ல நாள் நாள் நாள்
சாற்றுவாயடி போற்றுவாய் 18

## அள்ளிஅள்ளிக்குடிக்கும் என்றவர்ணமெட்டு.

துதிக்குஞ்சதுரகிரி யுதிக்கின்றதங்கமே
சுந்தரமகா லிங்கமே சிவலிங்கமே
சுந்தரமகா லிங்கமே
தோத்திரஞ்செய்ய நாற்றிசையோரு
மேத்திப்பணியப் போற்றுமடியோர் (துதி)

கதிக்குநல்லாதினஞ்சேர் பதிக்கோவில்வந்தோமே
கர்ப்பூரந்தேங்காய் தந்தோமே கண்டுகந்தோமே
கர்ப்பூரந்தேக்காய் தந்தோமே
கட்டியமாலை சூட்டினம்மேலே
கொட்டியவெண்ணீறிட்டுவணங்கி (துதி)

மருமலர்சோலையுயர் திருமரங்கண்டமே
வாறேழ்தினுசு முண்டுமே யிலைகொண்டுமே
வாறேழ்தினுசு முண்டுமே
வஞ்சியதிட்டப் பிஞ்சிலைபட்டை
மிஞ்சுபிணிக்குணப் பஞ்சையாப்போமே (துதி)

திருமதிலுள்ளமைந்த தேவதைக் கூட்டமே
ஜென்மசாபல்ய நாட்டமே வெகுகெட்டமே
ஜென்மசாபல்ய நாட்டமே
செந்திருமெச்ச விந்திரப்பச்சை
சந்திரகாந்தப் பந்தலில்சேர்ந்த (துதி)

ஆனந்தவல்லிபா மாட்சர்யம் பாரடி
அற்புதமான சீரடி நல்லபேரடி
அற்புதமான சீரடி
அல்லலையகலவைய முன்னமேமனைவைய
யென்னநினைக்கினுஞ் சொன்னமே கூடும் (துதி)

மோனர்முன் மண்டபத்தில் ஞானந்தம் பாஷையே
மோதுமணியி னோசையே தருமாசையே
மோதுமணியி னோசையே

முப்புராந்தீர்த்தருள் நற்பரன் பெற்றிடு
ஒப்பில்கரிமுகத் தப்பனைக்கூப்பியே (துதி)

கூறும்பனுவலிசைக் கோடானு கோடியே
கோரிவருவோர் நாடியே பதம்தேடியே
கோரிவருவோர் நாடியே
கொண்டபிரார்த்தனைத் தொண்டுகளெத்தனை
மண்டலத்தோர்பண வுண்டியல்போடுவார் (துதி)

சாருமட்ட திசையி லோர் கிரித்தாவிலே
சந்தணலிங்கர் கோவிலே துதிநாவிலே
சந்தணலிங்கர் கோவிலே
தங்குதபோதன ரிங்குவந்தாரவர்
பங்கயபாதமே செங்கைதொழுதமே (துதி)

இன்புறவே பணிந்தோர் நல்போகபாக்கியமே
யேறும்புகழ்சி லாக்கியமே தவயோக்கியமே
யேறும்புகழ்சி லாக்கியமே
யெல்லாப்பிணியுஞ்சொல்லால்த்தணியும்
அல்லலில்லாது தொல்லுலகாள்வார் (துதி)

அன்புடன்சிந்துரைத்த அனந்தப்ப தாசனே
ஆளுங்கயிலை வாசனே ஜெகதீசனே
ஆளுங்கயிலை வாசனே
அந்தமிகுந்த செந்தமிழ்தந்த
வந்தனம்பாவலர்சிந்தை புகுந்தே (துதி)

---

விருத்தம்.

1. கங்கைமதி காந்தை சடாடவியிற் சூடிக்
கடுவிடங்கந்தரத்திலணிந்தறுகால் மொய்க்கும்
பங்கயப்போதனக ரத்தின் மழுமானேந்திப்
பசியமயில் வேற்குகனைப் பயந்ததானு
மங்கைமருங்கினிதுறைய வமுதசொல்லா

மகிழ்ந்தாசிகூறியடி வணங்கியேத்த
துங்கசதுராசலத்தின் தருவினீழல்
துலங்கு மகாலிங்கமெனுந்தூயதேவே

2. ஆலியுருத்தழுமொரு சேய்க்கரு[illegible]டைக்கண்டிறந்தி
வாவமுத மூறும்
பாலுததியளித்த செழும்பரம கருணா நிதியே
பருவெண் கோட்டுத்
தோலுரியைத்தரித்த தனித்துரியாதீதப் பொருளே
சுருதிக கெட்டாப்
பாலவிலோசனக்குருவே சதுரகிரிதனி
லுறையும் பரம சோதி

3- சிலைமலையாய்கரிய நிறைத்திருமாலுந்திசை
முகனுந்தேடவங்கி
மலையுருவாய்நின்ற சுகவாரிதியே கழைத்
தனுவேய் வளித்தேருறுங்
கலைமதனைத்துகளாக்குங் கற்பகமே கற்பனை
யைக்கடந்து நீண்ட
தலைநடு வீறென்றுமில்லாச் சதுரகிரிதனி
லுறையுந்தரும மூர்த்தி

4. விலங்கலசைத்தெடுத்திடு கம்பத்துடை யோன்
மதிமருண்டு வெருவியுள்ளங்
கலங்கிவிழப்பதக் கொழுந்தையூன்றிநின்ற
பெம்மானேகற் பாந்தத்து
மலங்குதலிலாதடியேன் நின்றுதியே புரிவதற்காம்
வரந்தாஞான்று
நலங்கிளருஞ் சதுரகிரி நடுவினில் வீற்றினி
திருக்குநடணத்தேவே

5. கற்பினில்சிறந்தவெந்தன் காதலிபுகலக்கேளாய்
தற்பானருளினாலே சதுரமாசலத்தின்மேவு
மற்புதலிங்கர்பாத மன்புடன்வணங்கிக்கொண்டோம்
இப்பெருங்கிரியினின்றே இறங்கிநம்பதிசெல்வோமே

6. [illegible]ஞன்முகனிந்திரன்றெய்வயின்
நேசன்பாமகள் நீண்டபயக்கடல்
வாசனிந்நூல் வகுத்தவர் கேட்பவர்
தேசமல்கிச்சிறந்தென்றும் வாழ்கவே.

177080

உ

சுந்தரமகாலிங்கர் துணை.

# சதுரகிரி வழிநடை

# அலங்காரச் சிந்து

முற்றுப்பெற்றது.

---

Q23:417
M23

## விளம்பரம்.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் சாத்தூர் தாலூகா
மல்லி போஸ்டு கிருஷ்ணப்பேரி,
ஆ. சு. காளியப்ப நாடாரவர்களிடம்,
பெற்றுக் கொள்ளலாம்.

---

இந்நூல் இயற்றியவர்களால்
ஆனந்த பக்திரஸ பஜவணக்கீர்த்தவ...
அதிசீக்கிரத்தில் வெளிவரும்.

9A
10-5-9